# பாதிக்கப்பட்ட மக்களுக்காக இருப்பது BSNL மட்டுமே




மத்திய ஆட்சியாளர்களின் புதிய தாராளமய கொள்கைகளால் இந்திய தொலை தொடர்பு சந்தையில் தனியார்கள் உள்ளே நுழைந்தார்கள். தொடர்ச்சியாக மத்திய அரசில் பொறுப்பில் இருந்தவர்களின் தனியார் ஆதரவு, BSNL விரோத கொள்கைகளால் தனியார் நிறுவனங்கள் மிகப்பெரிய அளவில் ஆதாயமடைந்தன. மத்திய அரசுக்கு சொந்தமான பொதுத்துறை நிறுவனமான BSNL நஷ்டத்தில் இயங்கும் நிறுவனமாக மாறியது. ஆனாலும் தற்போது BSNLல் பணியாற்றும் ஊழியர்களும், அதிகாரிகளும், BSNL நிறுவனத்தின் சேவைகளை மேம்படுத்துவதற்கு பல கட்ட போராட்டங்களை நடத்தி வருகின்றனர். வேலை கலாசாரத்திலும் மிகப்பெரிய முன்னேற்றத்தை கொண்டு வந்துள்ளனர். ஆனாலும் வெத்து விளம்பரங்கள் மூலம் தரமான சேவையினை தாங்கள் தான் தருகிறோம் என தனியார் தொலை தொடர்பு நிறுவனங்கள் காட்டிக் கொள்கின்றன.

ஆனால் இந்தியாவின் மிக நம்பகமான தொலை தொடர்பு நிறுவனம் BSNL தான் என்பதை சென்னையில் நிகழ்ந்த வெள்ளம் மீண்டும் நிரூபித்துள்ளது. சென்னையில் உள்ள 9 தொலை தொடர்பு நிறுவனங்களில் முழுமையாக செயல்பட்டது பொதுத்துறை நிறுவனமான BSNL மட்டுமே.

கிடைத்துள்ள தகவல்களின் படி BSNLன் 80 சதவிகித மொபைல் மற்றும் தரைவழி சேவைகள் வெள்ளத்தின் போதும் செயல்பட்டன. இதர தனியார் தொலை தொடர்பு நிறுவனங்களை போல லாபத்தை மட்டுமே பேசக்கூடிய நிறுவனம் BSNL இல்லை என்பதை மீண்டும் நிரூபித்துள்ளது. சமுதாய கடமைகளை தனது காரியங்களில் முதன்மையாக கொண்டுள்ள ஒரே தொலை தொடர்பு நிறுவனம் BSNL மட்டுமே.

இதர தனியார் நிறுவனங்களின் NETWORK சீரழிந்த நிலைமையிலும், மிகப்பெரிய செலவுக்கு இடையே தனது மொபைல் NETWORKஐ BSNL பராமரித்தது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் நெருக்கடியான நேரத்தில் பொதுத்துறை நிறுவனமான BSNL சேவைகளை தொடர்ந்து வழங்கியது. சென்னையில் உள்ள 48 சதவிகித மொபைல் டவர்கள் தொடர்ச்சியாக டீசல் இயந்திரம் மூலம் இயங்கி வந்தது. இது மட்டுமே BSNLன் சமுதாய சேவையை எடுத்துக் காட்டுகிறது.

இயற்கை பேரழிவு காலத்தில் பாதிக்கப்பட்ட சென்னை மக்களுக்கு உதவிக்கரம் நீட்ட 02.12.2015 முதல் 7 நாட்களுக்கு மொபைல் மற்றும் தரைவழி தொலைபேசி

சந்தாதாரர்களுக்கு இலவச அழைப்பு, இலவச SMS மற்றும் இலவச DATA சேவைகளை வழங்கியது BSNL.

இதர தனியார் தொலை தொடர்பு நிறுவனங்களின் சேவைகள் இல்லாத காலத்திலும், BSNL வழங்கிய உயர்வான சேவைகளை பல பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இது ஆந்திர மாநிலத்தில் நிகழ்ந்த இயற்கை பேரழிவின் போதும் BSNL நிறுவனம் மட்டுமே சிறப்பான சேவை கொடுத்தது என்பதை ஆந்திர மாநில முதல்வர் திரு சந்திரபாபு நாயுடு தெரிவித்தது நமது நினைவுக்கு வருகிறது.

இயற்கை சீற்றத்தால் மக்கள் பாதிக்கப்படும் போதும், தீவிரவாத அச்சுறுத்தல் இருக்கும் இடங்களிலும், கடுமையான மலைபிரதேசங்களிலும் சேவை தருவது BSNL மட்டுமே. சமுதாய சிந்தனையோடு பாதிக்கப்படும் மக்களோடு ஒன்று பட்டு நிற்கும் பொதுத்துறை நிறுவனமான BSNL வளர்ந்தது என்றால் மக்களின் வாழ்வு பலப்படும். தனியார்களின் வளர்ச்சி அந்த நிறுவனத்தின் முதலாளிகளின் வாழ்வு பலப்படவே பயன்படும் என்பதை உணர்ந்து, மக்கள் மத்தியில் BSNL சேவைகளை முன்னெடுத்து செல்வோம்.

**BSNLஐ பலப்படுத்துவோம்!**

**மக்களுக்கான சேவையை உறுதிப்படுத்துவோம்!!**

**பாதிக்கப்பட்ட மக்களுக்கு உறுதுணையாய் நிற்போம்!!!**

சென்னை பெருவெள்ளத்தின் சமயத்தில் பல்வேறு முகநூல்களின் BSNLன் சேவைகள் தொடர்பாக வந்துள்ள செய்திகள் உங்களின் பார்வைக்கு:-




வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**